Disability Inclusion
Education for All

# சரியமைப்பின் நிலைகள்

ஒரு மாணவரின் பங்கேற்பு மற்றும் கற்றலை இயலச்செய்யத் தேவையான சரியமைப்பின் நிலையை ஏற்றுக்கொள்வது உட்பட, சந்திப்பில் சுயவிவரத்தை நிறைவு செய்வதற்கு SSG உறுப்பினர்களுக்கு வழிநடத்துபவர் ஆதரவு தருவார்.

| சரியமைப்பின் நிலை விவரிப்பு | இதன் அர்த்தம் என்ன? |
|---|---|
| முழு-பள்ளி அளவில் **தற்போதைய ஆதரவுச் சூழலில்** சம வயது சகாக்களுக்கு வழங்கப்படும் கல்வித் திட்டத்தை மாணவர்கள் பெறுதல். | இதன் அர்த்தம் எந்த **சரியமைப்புத் தேவையில்லை** என்பதாகும். |
| **வேறுபட்ட கற்பித்தல்** என்பது பலதரப்பட்ட மாணவர்கள் தங்கள் சகாக்களின் அதே அளவில் கற்றலைப் பெற வகுப்பு அளவில் செய்யப்படும் சரியமைப்புகளைக் குறிக்கிறது. | இதன் அர்த்தம் சரியமைப்புகள் **வழக்கமான வகுப்பறை பயிற்சிகள் மூலம் வழங்கப்படும் என்பதாகும்.** |
| **துணைப்பொருள் சரியமைப்புகள்** என்பவை வாரத்தின் குறிப்பிட்ட நேரங்களில் சில செயல்பாடுகளுக்கு நடப்பவை. மாணவருக்கு சில தனிப்பட்ட யுக்திகளைப் பள்ளி வழங்குகிறது. | இதன் அர்த்தம் **சில நேரங்களில் சரியமைப்புகள் வழங்கப்படும் என்பதாகும்.** |
| **கணிசமான சரியமைப்புகள்** என்பவை பெரும்பாலான நாள்களில் பெரும்பாலான நேரத்தில் வழக்கமான கல்வித்திட்டத்தில் மாணவருக்கு செய்யப்படும் ஆதரவுகள் அல்லது சரியமைப்புகள். | இதன் அர்த்தம் **பெரும்பாலான நேரங்களில் சரியமைப்புகள் வழங்கப்படும் என்பதாகும்.** |
| **விரிவான சரியமைப்புகள்** என்பவை அனைத்து நேரங்களிலும் மாணவருக்கு வழங்கப்படும் தனிப்பயனாக்கப்பட்ட மற்றும் இலக்குசார்ந்த சரியமைப்புகள் மற்றும்/அல்லது தீவிர ஆதரவு. | இதன் அர்த்தம் **எல்லா நேரமும் சரியமைப்புகள் வழங்கப்படும் என்பதாகும்.** |

Tamil | தமிழ்

22-030

VICTORIA State Government | Department of Education